ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

====================================================================

# தமிழர் பண்பாட்டில் பௌத்தம் ஒரு விடுதலை ஆயுதம்

முனைவர் இரா. இராஜா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) திருப்பத்தூர் – 635601

====================================================================

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் தொலைத்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியால் உலகமயமாதல் நிகழ்ந்தது. அதன் தொடர்ச்சியாக இருபத்தோராம் நூற்றாண்டின் இரண்டாம் பத்து எண்ம (Digital) உலகமாக மாறியது. இது நம் காலத்திய மிகப்பெரிய மாற்றம். அதுபோன்ற ஒரு மாற்றம்தான் மேலைநாட்டில் கி.பி.17 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி. அது இந்தியாவிலும் பிரதிபலித்தது. எண்மப் புரட்சிக்கும் சற்றும் குறையாதது தொழிற்புரட்சி. அப்புரட்சியின் விளைவாக உருவானதே அச்சுப் பண்பாடு. காலனியாதிக்கத்தின் விளைவால் அது இந்தியாவிலும் பரவியது. அதன் தொடர்ச்சியாகக் கல்வியின் பரவலாக்கமும் பிரதிகளின் பரவலாக்கமும் பன்மடங்கு வளர்ந்தது. மரபார்ந்த செய்யுள் இலக்கியம் மாறி படிப்படியாக உரைநடை இலக்கியமும் அதன் தொடர்ச்சியாக நவீன இலக்கியங்களும் உருவாயின. மேற்கில் உருவான மறுமலர்ச்சிக் காலம் இந்தியாவிலும் பரவி பகுத்தறிவு சிந்தனை பரவியது. அடிமைப்பட்டுக்கிடந்த தமிழினம் சுதந்திரத்தை உணர ஆரம்பித்த காலமது. திராவிட மொழிக்குடும்பம் கண்டறியப்பட்டதும் பௌத்தம் கண்டறியப்பட்டதும் பகுத்தறிவு கண்டறியப்பட்டதும் கி.பி. 19 ன் பிற்பகுதி மற்றும் கி.பி. 20 ன் முற்பகுதியின் கொடைகள்.

அடிமை முறைகள் பலவிதம். அவற்றில் முதன்மையானவை ஏகாதிபத்தியம், வர்க்கம், சாதி, மதம், இனம், ஆணாதிக்கம், நிலப்பரப்பு. இவற்றில் சாதி மட்டும் இந்தியாவிற்குரிய ஆதிக்க வடிவமாகும். பிற ஆதிக்க வடிவங்கள் அனைத்திலும் சாதி இழையோடிருக்கும் என்பது சாதிக்குரிய சிறப்புத்தன்மை ஆகும். சாதி இல்லாமல் எந்த ஆதிக்க வடிவமும் இந்தியாவைப் பொருத்தவரையில் இயங்குவதில்லை. அதனால்தான் உலகம் முழுவதும் நேரடியாக வினையாற்றிய மார்க்சியச் சித்தாந்தம், இந்தியாவில் நேரடியாக வினையாற்ற முடியாமல் போனது. இந்தியாவைப் புரிந்துகொள்ள அயோத்திதாசர், அம்பேத்கர், பெரியார் தேவை. அவர்களில் அம்பேத்கரும் அயோத்திதாசரும் முன்னெடுத்து உருவாக்கிய விடுதலை ஆயுதம்தான் பௌத்தம். அயோத்திதாசர் தெற்கில் முன்னிறுத்திய பௌத்தத்தை அம்பேத்கர் வட இந்தியாவில் முன்னெடுத்தார். பிராமணிய மரபுப்படி ஒடுக்கப்பட்டோர் அனைவரும் சூத்திரர்கள். அன்று பிராமணிய மதத்திற்கு நேரெதிரான மதம் பௌத்த மதம். ஆனாலும் நவீன வரலாற்றில் பௌத்தம் ஒட்டுமொத்த சூத்திரர்களின் விடுதலை ஆயுதமாக மாறாமல், தலித்துகளின் விடுதலை ஆயுதமாக மாறியது ஏன்? என்ற கேள்வியின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.

## தமிழர் பண்பாட்டில் பௌத்தம்

பௌத்தமும் சமணமும் அவைதீக சமயங்கள். இவை பகுத்தறிவு சார்ந்தவை; கடவுளை மையப்படுத்தி இயங்காதவை. இவற்றில் பௌத்தம் காலத்தால் முந்தியது. அது இந்தியா முழுமைக்குமான சமயம். கல்வி அறிவை, சமத்துவத்தை பொது சமூக மக்களுக்கு மறுத்தது சனாதனம். ஆனால் அதை பௌத்தம் வழங்கியது. அதுமட்டுமல்லாமல் இலக்கிய, இலக்கணப் பணியையும் செய்தன. மணிமேகலையும், குண்டலகேசியும் வீரசோழியமும் பௌத்த சமயத்தின் கொடைகள். ‘இத்தகைய பௌத்த சமயத்தை முதலில் சமணம் தன் பங்கிற்கு அழித்தது. பக்தி

இலக்கியத்தின் நிறுவன செயல்பாடுகள் பௌத்த சமயத்தைத் திட்டமிட்டு அழித்துள்ளன.' (வேங்கடசாமி, சீனி., பௌத்தமும் தமிழும், பக். 92-93) என்பதைப் பௌத்தமும் தமிழும் நூலில் மயிலை சீனி வேங்கடசாமி கூறுகிறார். திருஞானசம்பந்தரின் பதிகம்தோறும் பதிவாகியுள்ள பௌத்த வெறுப்புகள் சனாதனம் சார்ந்தவை. வெறுப்பை உமிழாத ஒரு சமயத்தை வெறுப்பைக் கொண்டு அழித்த வரலாறுதான் பௌத்தம் சார்ந்த தமிழ்ப் பண்பாட்டு வரலாறு. வரலாறு தனக்கான இடத்தை உருவாக்கிக்கொள்ளும் என்ற கூற்றுக்கு இணங்க இருபதாம் நூற்றாண்டில் பௌத்தம் புதுப்பிக்கப்பட்டது.

*பௌத்த மறுமலர்ச்சி காலம்*

பௌத்தம் முன்னெடுக்கப்பட்ட காலம் பௌத்த மறுமலர்ச்சி காலம் என்று அழைக்கப்படுகிறது. அது 19 ஆம் நூற்றாண்டின் இறுதியும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும். பௌத்த மறுமலர்ச்சி காலம் பௌத்த சமயத்தை வளர்ப்பதில் பல்வேறு விவாதங்களை முன்னெடுத்த காலம். 'சாக்கிய பௌத்தம்', 'மகாபோதி பௌத்தம்' என அவை அழைக்கப்பட்டன. சாக்கிய பௌத்தம் அயோத்திதாசரால் முன்னெடுக்கப்பட்டது. மகாபோதி பௌத்தம் சிங்காரவேலரால் முன்னெடுக்கப்பட்டது. சிங்காரவேலர் பௌத்த சமயத்தை நிறுவனம் சார்ந்த ஒன்றாகப் பார்த்தார். இப்பார்வை நவீன ஆங்கில வாசிப்பின் விளைவு. அயோத்திதாசர் பௌத்த சமயத்தை வாழ்வு சார்ந்த ஒன்றாகப் பார்த்தார். இவற்றை, "பௌத்தத்தின் நவீன வரலாறு ஆங்கிலம் படித்த அறிவாளிகளுடையது. பூர்வ வரலாறு மரபார்ந்த அறிவாளிகளுடையது" (ஸ்டாலின் ராஜாங்கம், பெயரழிந்த வரலாறு, ப.145) என்ற கூற்றும் அயோத்திதாசர் பௌத்தத்தை, "வாழும் சமயமாகக் கருதினார்" (ஸ்டாலின் ராஜாங்கம், பெயரழிந்த வரலாறு, ப.145) என்ற கூற்றும் உணர்த்துகின்றன. அயோத்திதாசர் தமிழ்ப் பண்பாட்டிற்குள் ஊடுருவி பௌத்தம் வேஷ பிராமணர்களால் திரிக்கப்பட்டாலும் அதன் வேர் இன்னும் எஞ்சியிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, பௌத்தம் வாழும் சமயம் என்பதை நிரூபித்தார்.

ஆதிக்கத்தின் வடிவங்களை எதிர்கொள்ளும் பொருட்டு உருவானதே காந்தியம், பௌத்தம், மார்க்சியம், திராவிடம், சுயமரியாதை.. முதலான சிந்தனைகள் ஆகும். இந்தச் சிந்தனைகளால்தான் இருபதாம் நூற்றாண்டு சிந்தனைகளின் நூற்றாண்டு என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இச்சிந்தனை செயல்பாடுகளில் முதன்மையானவை அரசியல் விடுதலையும் சமூக விடுதலையும் ஆகும். அரசியல் விடுதலையை முன்னெடுத்த சிந்தனைகளாக, காந்தியின் அஹிம்சை தேசியவாதமும் சுபாஸ் சந்திரபோஸின் தீவிர தேசியவாதமும் இருந்தன. சமூக விடுதலையை முன்னெடுத்த சிந்தனைகளாக, மார்க்சியமும் பௌத்தவியலும் திராவிடவியலும் இருந்தன. அரசியல் விடுதலையை முன்னெடுத்த சிந்தனைகள் ஆங்கிலேய ஆதிக்கத்தை மட்டுமே எதிர்த்தன. கூடவே இந்துமதம் சார்ந்து சில சீர்திருத்த சிந்தனைகளையும் முன்னெடுத்தன. சமூக விடுதலையை முன்னெடுத்த சிந்தனைகள் அனைத்துவகை ஒடுக்க முறைகளையும் எதிர்த்தன. கூடவே தங்களுக்கான அரசியல் அதிகாரத்தையும் முன்வைத்தன. இக்கட்டுரை சமூக விடுதலையை முன்னெடுத்த பௌத்தவியல் சார்ந்தது என்பதால், அரசியல் விடுதலையை முன்னெடுத்த காந்தியம் விலக்கிக்கொள்ளப்படுகிறது.

*மார்க்சியவியலும் பௌத்தவியலும்*

மார்க்சியச் சிந்தனை மேற்குலக அறிவின் விளைச்சல். அதை அப்படியே இந்தியா கைக்கொண்டது. இன்றுவரை அது தொடர்கிறது. அதுவே மார்க்சிய இயக்கங்களின் தோல்விக்குக் காரணம் ஆகும். இதை அம்பேத்கர் ஆரம்பத்திலே சுட்டிக்காட்டியுள்ளார். "தொழிலாளர் வர்க்கம் சிதறுண்டு கிடப்பதற்குக் காரணம் பார்ப்பனியமே" (அம்பேத்கர், வர்க்கத் திரட்சிக்குத் தடையாக இருப்பது எது?, ஜமாலன், குடியாண்மைச் சமூகமும் நுண் பாசிசமும், ப.382). மேலும் இந்தியாவைப் பொருத்தமட்டில், "கூலி உடல் உழைப்பினால் மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை. பார்ப்பனிய மதிப்பும் தீர்மானிக்கிறது (மேலது., ப.385). இப்புரிதல் இல்லாமலேயே மார்க்சியம் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. தமிழகத்தில் சிங்காரவேலர் அதன் தொடக்கமாகும். அவர் மகாபோதி பௌத்தத்தை விடுதலை ஆயுதமாகக் கொண்டு செயல்பட்டாலும் மகாபோதி சங்கம் தொடர்ந்து நிலைபெற முடியாமல் போனது என்பது வரலாறு. எனவே சிங்காரவேலர் அதிலிருந்து விலகி மார்க்சியத்தை வளர்த்திருக்கலாம்.

*மார்க்சியம் திராவிடத்திடத்தோடு இணைந்தும் விலகியும் மாறிமாறிப் பயணித்தது. மார்க்சியம் சூத்திரர்கள் மற்றும் தலித்துகளின் விடுதலையை உழைப்பாளர்கள் என்ற புள்ளியில் வைத்தே அணுகியது. மார்க்சியம் மண்ணுக்கேற்றவாறு அமையாமல் போனது காலனியாதிக்க மனோபாவத்தின் விளைச்சல். பௌத்தம் தமிழ்ப் பண்பாட்டோடு இணைத்து அயோத்திதாசர் எடுத்துச் சென்றதால் பௌத்தம் மண்ணுக்கேற்றவாறு அமைந்தது.*

*திராவிடவியலும் பௌத்தவியலும்*

*திராவிடம் என்றும் தமிழர் என்றும் முதலில் தீவிரமாகப் பேசியவர் அயோத்திதாசர் என்றாலும் அதைப் பிராமணர் அல்லாதார்களின் அரசியல் இயக்கமாக முன்னெடுத்துச் சென்றவர் பெரியார். "பெரியார் தேர்தலில் பங்கெடுக்காத கலாச்சாரச் செயலபாட்டைத் தேர்ந்தெடுத்தது போல், அயோத்திதாசரும் அரசியலில் நேரடியாகப் பங்கெடுக்காத கலாச்சாரச் செயல்பாட்டைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்" (தமிழவன், திராவிடம், தமிழ்த்தேசம், கதையாடல், ப.03). என்றாலும் பெரியார் தமிழ்ச் சமூகத்தில் இடம் பிடித்ததற்கு "அவர் (பெரியார்) கட்சிகளை ஆதரித்தும் எதிர்த்தும் செயல்பட்டுள்ளார் என்பதாகும். அதாவது ஒரு துணை அரசியல் இயக்கமாகவே, தனது இயக்கத்தை உருவாக்கி வைத்திருந்தார்" (மேலது.) என்பது காரணமாகும். இந்தியா சாதிகளின் பிறப்பிடம். சாதி என்றால் அது வெறும் பிரிவைக் குறிப்பதன்று. சமத்துவத்திற்கு எதிரானது; வர்ணங்களின் அடிப்படையில் செயல்படுவது. எம்.சி.ராஜா, "இந்தியாவில் சாதி சக்திவாய்ந்த ஒரு இயக்கமாகச் செயல்படுகிறது" (எம்.சி.ராஜா, ஒடுக்கப்பட்ட இந்துக்கள், ப.22) என்று சாதியின் ஆதிக்கத்தைச் சுட்டுகிறார். சாதிக்குப் பிராமணியம்தான் அடிப்படை என்றது திராவிடம். அதனடிப்படையில் திராவிடம் நீதிக்கட்சி வழி பிராமணர் X பிராமணரல்லாதார் என்ற பிரிவினையை முதன்மைப்படுத்திச் செயல்பட ஆரம்பித்தது. இதில் தலித்துகள் இயல்பாகவே ஓரங்கட்டப்பட்டனர்.*

*பிராமணரல்லாதாரிடையே செயல்பட்டு வந்த பிராமணியம் அதாவது ஏற்றத்தாழ்வை முன்னிறுத்துகிற உயர்சாதி மனோபாவம் ஒடுக்கப்பட்டவர்களை உள்ளடக்கவில்லை. அதன் காரணமாக ஒடுக்கப்பட்டோரும் தங்களுக்கான அரசியலை தங்களிடத்திலிருந்து பேசினர். அயோத்திதாசர், ரெட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா அவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள். சாதி இந்துக்களால் அழைக்கப்பட்ட பறையர் என்பதற்குப் பதிலாக ஆதிதிராவிடர் என்ற சொல்லை முன்னிறுத்தினர் ஆதி திராவிடர்கள். ஆதி திராவிடர் என்ற சொல் திராவிடர் என்ற சொல்வழி உருவானது. காரணம் இவர்கள் அனைவரும் தமிழ் ஓர்மையில் உருவானவர்கள். பிராமணியமே இவர்களைப் பிரித்தது. அயோத்திதாசர் பறையரை பூர்வபௌத்தராக முன்னிறுத்தினார். பௌத்தத்தின் நீட்சியை ஆதிதிராவிடர்களின் பண்பாட்டில் இன்றும் காணலாம் என்றார். 'சாதி இழிவிற்கும் இழிவாக்கப்பட்ட சாதிக்கும் வேறுபாடு உண்டு என்றார். அந்தவகையில் பறையர் இழிவாக்கப்பட்ட சாதி அல்ல. சாதி இழிவு என்பது சாதியை மறுத்த பூர்வ பௌத்தர்களின் மீது பூசப்பட்ட சாயம் என்பதாக அயோத்திதாசர் வாதிடுகிறர்' (ஸ்டாலின் ராஜாங்கம், பெயரழிந்த வரலாறு, ப.151). ஆதிதிராவிடர் என்ற சொல்லாட்சி உருவாகக் காரணம் அயோத்திதாசர் பறையரைப் பூர்விக பௌத்தராக முன்னிறுத்திய செயல்தான். திராவிடர் என்ற சொல் தமிழக அரசியலில் முன்னெடுக்கப்பட்டபோது பூர்வ பௌத்தர் ஆதிதிராவிடர் என்ற சொல்லை நோக்கி நகர்ந்தனர்.*

*பிராமணரல்லாதாரும் பஞ்சமரும் பிராமணியத்தால் ஆளப்பட்டனர். பிராமணியமே தங்களுக்கு எதிரி என்பதை உணர்ந்தும் இருந்தனர். இவற்றை ஒடுக்கப்பட்ட சமூகம் திராவிட வேரின்வழித் தன்னை அடையாளம் கண்டதும் சாதி இந்துக்கள் திராவிடத்தைக் கொண்டு பிராமணியத்தை எதிர்த்ததன் வழியும் அறிந்துகொள்ள முடிகிறது. அதேநேரம் பிராமணியத்தின் சூழ்ச்சியில் இருவருமே சிக்கிக்கொண்டனர். இதனை ஒடுக்கப்பட்டவர்கள் திராவிடத்தை விலக்கியதன் வழியும் சாதி இந்துக்கள் பறையர் என்று ஒடுக்கப்பட்ட சமூகத்தை விலக்கியதன் வழியும் அறிந்துகொள்ள முடிகிறது. எனவே சாதி இந்துக்களும் ஒடுக்கப்பட்டோரும் ஒரே நேரத்தில் பிராமணியத்திற்கு எதிராகவும் பிராமணியத்தின் சூழ்ச்சியிலும் பயணம் செய்துள்ளனர். பெரியார் தலித்துகளை இணைத்துப் பேசியதும் தலித் இயக்கங்கள் தங்களது கூட்டத்தில் பெரியாரைப் பயன்படுத்திக் கொண்டதும் இரு குழுவினரின் பிராமணிய எதிர்ப்பு செயல்பாட்டின் அடையாளங்களில் ஒன்று..*

பிராமணியத்திற்கு நேர் எதிரான பௌத்தத்தை அனைவரும் விடுதலை ஆயுதமாகக் கையிலெடுக்காதது ஏன் என்ற கேள்வி இயல்பானதுதான். அதற்குப் பிராமணிய சூழ்ச்சி ஒரு காரணம் என்றாலும் திராவிடம் தனி மொழிக்குடும்பமாக முன்னிறுத்தப்பட்டதும் அதில் தமிழ் மூத்த மொழியாக இருந்ததும் அதற்குச் சங்க இலக்கியம் என்ற மாபெரும் இலக்கியப் பாரம்பரியம் இருந்ததும் ஆகிய தமிழ் ஓர்மை திராவிடத்தை முன்னெடுத்தமைக்கு முதன்மைக் காரணங்களாகும். பௌத்தம் அயல்தன்மை கொண்ட ஒன்று. அதுமட்டுமல்லாது, "அயோத்திதாசர் செய்தது ஒரு கட்டமைப்பு மாற்றமாகும். இந்தக் கட்டமைப்பு, படைப்பு எழுத்தைத் தரவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்" (மேலது.). இக்கூற்றை முன்புகூறிய பெரியார் தனது கட்சியைத் துணை அரசியல் இயக்கமாக முன்னெடுத்தார் என்பதுடன் இணைத்துப் பார்க்க வேண்டும். பெரியாருக்கு இலக்கியமும் துணை செய்தன. அயோத்திதசாருக்கு இலக்கியம் இல்லை. கருத்துப்பரவலின் குறைவிற்குக் அதுவும் ஒரு காரணம். திராவிடத்தைப் போல பௌத்தம் மொழி உணர்வோடு இணைந்த சிந்தனை அன்று. மொழி நனவிலியாகச் செயல்படக்கூடியது. தமிழ் ஓர்மையால் திராவிடம் நிலைபெற்றதற்கும் பௌத்தம் சுருங்கியதற்கும் மொழி ஓர் முதன்மையான காரணமாகும்.

பௌத்தவியல்

அம்பேத்கரியமும் அயோத்திதாசரியமும் பிராமணியத்திற்கு நேர் எதிராக பௌத்தத்தை முன்னிறுத்தின. பௌதத்தை முன்னெடுத்தவர்களும் ஒடுக்கப்பட்டவர்களாக இருந்தனர். ஒரு குறிப்பிட்ட சிந்தனை யாரால் எங்கு எப்பொழுது முன்னெடுக்கப்படுகிறது என்பதைப் பொருத்து சில நிகழ்வுகள் நடந்தேறும். அது பிராமணியச் சிந்தனையின் விளைவு. அப்படித்தான் பௌத்தம் தலித்துகளின் விடுதலை ஆயுதமாக மாறியது. பௌத்தவியல் தலித்துகளின் விடுதலை ஆயுதத்தோடு சுருங்குவதற்கு, மொழி ஓர்மையும் அயோத்திதாசரிய இலக்கிய இன்மையும் முக்கிய காரணங்களாகும். திராவிடமும் மார்க்சியமும் பௌத்தத்தை இரண்டாம் மூன்றாம் நிலையில் வைத்து அணுகின. ஒடுக்கப்பட்டோரின் பிரச்சினைகளோடு நேரடியாகத் திராவிடமும் மார்க்சியமும் உரையாடவில்லை. தலித்துகளை மார்க்சியம் உழைப்புச் சுரண்டல் அடிப்படையிலும் திராவிடம் ஒடுக்கப்பட்டோர் அடிப்படையிலும் அணுகியது. பௌத்தம் தலித்துகளை ஆதிகுடிகளாக அணுகியது. ஆதிகுடிகளுக்குத் தேவைப்பட்ட பூர்வ பௌத்தர் அணுகுமுறை திராவிடவியலுக்கும் மார்க்சியவியலுக்கும் தேவையாக இருக்கவில்லை.

மார்க்சியவியல் சமூக விடுதலையோடு அரசியல் விடுதலையையும் முன்வைத்தன. திராவிடவியல் சமூகவிடுதலையே அரசியல் விடுதலையின் பாதையாக முன்வைத்தது. பௌத்தவியல் விடுதலையை வாழ்வியலாக மாற்றியது. அந்தவகையில் மூன்று சிந்தனைகளும் சமூகவியல் சிந்தனைகளுக்கு வெவ்வெறு பாதைகள் அமைத்தன என்று கூறலாம்.

பௌத்தக் கொள்கைகளில் சில

- உண்மையான மதம் மனிதனின் மனதில்தான் இருக்கிறது; சாஸ்திரங்களில் அல்ல.
- தனியுடைமை என்பது ஒரு வர்க்கத்துக்கு அதிகாரத்தையும் மற்றொரு வர்க்கத்திற்கு துன்பத்தையும் கொடுக்கிறது.
- மனிதர்கள் அனைவரும் சமம்
- உயர்ந்த இலட்சியங்களே முக்கியமானவை; உன்னதமான பிறப்பு அல்ல
- அனைவருக்கும் கற்பதற்கான உரிமை உள்ளது.
- உண்மைக்காகவும் நீதிக்காகவும் நடைபெறும் போர்களைத் தவிர பிற போர்கள் அனைத்தும் தவறானவையாகும். (அம்பேத்கர், புத்தரா கார்ல் மார்க்சா, பக்.7-9).

பௌத்தம் உருவாகிய பின்னணி

இந்தியா, சனாதனத் தர்மமான பிராமணியச் சித்தாந்தத்தால் கட்டுண்டு கிடந்தது. அந்தச் சித்தாந்தம் சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டும் தனியுடைமை சார்ந்தும் சமத்துவத்திற்கு எதிரான சாதியை நிலைநிறுத்தியும் பிறப்பு சார்ந்தும் கல்விக்கு எதிராகவும் அநீதி சார்ந்தும் செயல்படுகிறது. பிராமணியத்தை எதிர்கொள்வதற்குப் பிராமணியத்தால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பூர்வகுடி மக்கள் பௌத்தத்தைக் கையில் எடுத்தனர். அதற்கு

*பௌத்தம் பிராமணியத்திற்கு நேர் எதிராக இருந்தமை காரணமாகும். இதனை, 'பிராமணியத்திற்கும் பௌத்தத்திற்குமான இடையிலான வரலாறுதான் இந்திய வரலாறு' என்ற அம்பேத்கர் கூற்றும் உறுதிப்படுத்துகிறது.*

*இருபதாம் நூற்றாண்டில் பௌத்தம் தமிழ்ப் பண்பாடு சார்ந்து உருவாக்கப்பட்டது. பௌத்தம் மற்றொரு சமயம் அல்ல. அது ஒரு வாழ்வியல் முறையாகும். "புத்தரின் வழிமுறை என்பது மனிதனின் மனதை மாற்றுவது" (அம்பேத்கர், புத்தரா கார்ல் மார்க்சா, ப.53) என்று அம்பேத்கர் கூறுகிறார். பௌத்தம் தலித்துகளின் விடுதலையின் ஆயுதமாக முன்னெடுக்கப்படக் காரணம் மக்களின் மனதை மாற்றவும் சமத்துவத்தை வாழ்வியல் நெறியாக ஆக்குவதற்குமாகும்.*

*தற்பொழுது பௌத்தம்*

*அயோத்திதாசரால் முன்னெடுக்கப்பட்ட பௌத்த விளைவால் சாதி ஒழிப்பு மற்றும் சமத்துவச் செயல்பாடுகளாக, பௌத்தத் திருமணங்களும் பௌத்த பெயர்கள் வைத்தலும் பௌத்த மாநாடு நடத்துதலும் பௌத்த சங்கங்கள் உருவாக்குதலும் பௌத்தச் சிந்தனைகளை முன்வைத்து இலக்கியங்கள் எழுதப்படுதலும் புத்தராக வாழ முற்படுதலும் புத்தரை வழிபடுதலும் நிகழ்கின்றன. இன்றைய சமூக ஊடகங்களில் சாதிய, மத எதிர்ப்பு அடையாளமாக புத்தரின் வாசகங்களும் புத்தரின் உருவங்களும் பரப்பப்படுகின்றன. ஒட்டுமொத்தத்தில் பௌத்தம் அயோத்திதாசர், அம்பேத்கரின் வழி தலித் விடுதலை ஆயுதமாக மாறியது. தற்பொழுது பொதுசமூகத்தின் ஆயுதமாக மாறிக்கொண்டிருக்கிறது.*

*பயன்பட்ட நூல்கள்*


- *அம்பேத்கர், புத்தரா கார்ல் மார்க்சா, பிரதீப் (மொ.ஆ.), எழுச்சி பதிப்பகம், ஈரோடு, 2022.*
- *அம்பேத்கர், அம்பேத்கர் இன்றும் என்றும், விடியல் பதிப்பகம், கோவை, 2021.*
- *தமிழவன், திராவிடம், தமிழ்த்தேசம், கதையாடல் ஒரு நூற்றாண்டுத் தமிழ்ச் சிந்தனை வரலாறு, அடையாளம், திருச்சி, 2014.*
- *வேங்கடசாமி, சீனி., பௌத்தமும் தமிழும், வசந்தா பதிப்பகம்,சென்னை, 2007.*
- *ராஜா, எம்.சி., ஒடுக்கப்பட்ட இந்துக்கள், நீலம், சென்னை, 2022.*
- *ஸ்டாலின் ராஜாங்கம், பெயரழிந்த வரலாறு அயோத்திதாசரும் அவர்கால ஆளுமைகளும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2019.*
- *ஜமாலன், சொற்களால் நெய்யப்படும் உலகு, நன்னூல் பதிப்பகம், சென்னை, 2021.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********